# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC. No. 124/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition Witness | அ.சா. 5 | Calling | விற்பனை பிரதிநிதி |
| Witness Name | திரு. நாகராஜன் (எ) சதீஸ் | Religion | |
| Father's Name | முருகேசன் | Age | 33 |
| Village | வடக்கு காலனி | | |
| Taluk | புதுக்கோட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2025.

**(எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பில் கு.வி.மு.ச மனு 317 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

__முதல் விசாரணை__

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வந்து விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 2023 ஆம் ஆண்டு தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் நானும், கார்த்திக் என்பவரும் TVS corner ல் இருந்து மேட்டுப்பட்டி நோக்கி இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது மருப்பிணி சாலையில் Hero Honda இரு சக்கர வாகனம் குறுக்கே வந்து எங்கள் மீது மோதியது.

2. அதில் நானும், கார்த்திக்கும் கீழே விழுந்துவிட்டோம். எங்கள் மீது மோதிய இரு சக்கர வாகனத்தில் வந்த நபரும் கீழே விழுந்துவிட்டார். கார்த்திக்கு தலையிலும், வாயிலும் அடிப்பட்டது. எனக்கு காயம் எதுவும் இல்லை. இரு சக்கர வாகனத்தில் வந்த நபருக்கும் அடிப்பட்டது.

3. அவசர ஊர்தி மூலம் PMCH க்கு கார்த்திக்கை அனுப்பி வைத்தேன். எங்கள் மீது மோதிய இரு சக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் ஓட்டுநர் பெயர் விவரம் எனக்கு தெரியாது. அதனை நான் கவனிக்கவில்லை. கார்த்திக் சிகிச்சைக்கு பிறகு வீடு திரும்பிவிட்டார். எங்கள் மீது மோதிய இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபர் இறந்துவிட்டார் என்ற தகவல் கிடைத்தது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. கடந்த 22.05.2023 அன்று எதிரி கார்த்திக் (எ) சீனிவாசன் TN 55 BS 4640 என்ற பதிவெண் கொண்ட Pullet இரு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து TN 55 D 3242 என்ற பதிவெண் கொண்ட Splendor இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல.

5. TN 55 D 3242 என்ற வாகனத்தில் பயணித்த கணேசன் என்பவருக்கு காயம் ஏற்பட்டு, அவர் இறந்துவிட்டதாகவும் , சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.

| |
|---|
| என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>(ஒம்/– சி.பாரதி)<br>நீதித்துறை நடுவர் எண் –1 ,<br>புதுக்கோட்டை. |